வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
SAGARMALA
PORT-LED PROSPERITY
Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
: prosectionvocport@gmail.com
Website: www.vocport.gov.in

Press Release: 15 Date: 04.12.2021

**VOC Port Contributes Rs.18 Lakhs to Thoothukudi District Administration for procuring pumps for dewatering the flooded areas**

Today on 04.12.2021, V.O. Chidambaranar Port contributed Rs. 18.00 Lakhs to the District Administration, as a Corporate Social Responsibility (CSR) initiative, for procurement of high power pumps. The high power pumps would be used to expedite dewatering of waterlogged areas of Thoothukudi city and other areas on a war footing basis and restore normalcy at the earliest.

Shri T.K. Ramachandran, I.A.S., Chairman, V.O. Chidambaranar Port Trust, handed over a Cheque for Rs. 18 Lakhs to Dr. K. Senthil Raj, I.A.S., District Collector, Thoothukudi District, in the presence of Shri Bimal Kumar Jha, Deputy Chairman, VOC Port, and other senior officials of the Port, at the Port's Administrative Office.

Thoothukudi district has received a whopping 39 cm of rainfall during the month of November, 2021, as against the normal average of 18 cm of rainfall, causing severe flood and water stagnation in several parts of the district and in the Thoothukudi Corporation limits, which has received 43 cm of rainfall during the month of November.

V.O. Chidambaranar Port has been regularly extending its support during the Monsoon season by deploying its fire tenders and pumps for dewatering the flooded areas of Thoothukudi.

While speaking on the occasion, Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, stated that the Port is always ready to lend its support to the District Administration through its well-articulated CSR initiatives, for the safety and well being of the local community. He also applauded the sincere efforts taken by the District Administration to dewater the flooded parts of Tuticorin and to manage the floods.

Dr. K. Senthil Raj, I.A.S., District Collector, Thoothukudi District, in his address, thanked the Port for contributing Rs. 18 Lakhs for procuring high power motors for dewatering the flooded regions of Thoothukudi. He also stated that the procured motors would be maintained regularly so that they could be used at the times of need. He further stated that the District Administration has chalked out elaborate plans to mitigate the floods in and around Thoothukudi in a permanent way.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
SAGARMALA PORT-LED PROSPERITY
Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
: prosectionvocport@gmail.com
Website: www.vocport.gov.in

மக்கள் தொர்டபு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண் : 15 தேதி:04.12.2021

**வ.உ. சிதம்பரனார் துறைமுகம் ரூபாய் 18 இலட்சத்திற்கான காசோலையை நவீன பம்ப் மோட்டர்கள் வாங்குவதற்கு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்திற்கு வழங்கியது**

இன்று 04.12.2021, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம், ரூபாய் 18 இலட்சத்திற்கான காசோலையினை தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்திற்கு, பெருநிறுவன சமூக பொறுப்பு செயல்பாட்டின் கீழ் (CSR) நவீன பம்ப் மோட்டார்களை வாங்குவதற்கு வழங்கியது. இம்மோட்டார்கள் மூலம் தூத்துக்குடி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை விரைவாக வெளியேற்றி மக்கள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு பயன்படுத்தப்படும்.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள் திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக துணைத் தலைவர் மற்றும் துறைமுக துறை தலைவர்களின் முன்னிலையில் டாக்டர். கே. செந்தில்ராஜ்,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம், அவர்களிடம் ரூபாய் 18 இலட்சத்திற்குகான காசோலையை, வ.உ.சிதம்பரனார் துறைமுக நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கினார்கள்.

இந்த வருடம், தூத்துக்குடி மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் பதிவாகிய மழையின் அளவான 39 செ.மீ (தூத்துக்குடி மாவட்டத்தின் சராசரி மழையின் அளவு 18 செ.மீ.) பெய்துள்ளதால், தூத்துக்குடி மாவட்டத்தின் பல பகுதிகளில் கடுமையான வெள்ளம் மற்றும் நீர் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் இந்த ஆண்டின் நவம்பர் மாதத்தில் 43 செ.மீ மழை பதிவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம், மழை காலங்களில் தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு துறைமுகத்தின் தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் பம்புகளை வழங்கி மாவட்ட நிர்வாகத்திற்கு துணையாக நின்று தனது பேராதரவை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள், தனது உரையில், வ.உ.சிதம்பரனார் துறைமுகம், தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் பெருநிறுவன சமூக பொறுப்பு செயல்பாட்டின் கீழ் (CSR) வழங்குவதற்கு தயாராக உள்ளது என்று கூறினார். மேலும், தூத்துக்குடி மாவட்டத்தில் இடைவிடாது பெய்த கனமழையின் காரணமாக தூத்துக்குடி நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் நீர் தேக்கத்தினை கட்டுபடுத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வரும் அனைத்து பணிகளையும் பாராட்டினார்.

டாக்டர். கே. செந்தில்ராஜ், இ.ஆ.ப, மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள், தனது உரையில், அதிநவீன பம்ப் மோட்டார்களை வாங்குவதற்காக ரூபாய் 18 இலட்சத்திற்கான காசோலையினை தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்திற்கு வ.உ.சிதம்பரனார் துறைமுகம் வழங்கியதற்கு தனது நன்றியினை தெரிவித்து கொண்டார். மேலும், அவர் கூறுகையில் இவ்வாறாக வாங்கப்படும் அதிநவீன மோட்டார்கள், இம்மழை காலத்திற்கு பின்பும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு தேவைகேற்ப உபயோகிக்கப்படும் என்று கூறினார். தூத்துக்குடி மாவாட்ட நிர்வாகம், மாவட்டத்தில் மழைகாலங்களில் ஏற்படும் நீர்தேக்கங்களை நிரந்ததரமாக அகற்றுவதற்கு பல்வேறு திட்டங்களை தீட்டியுள்ளது என்று கூறினார்.

மேற்கண்ட தகவலை வ.உ. சிதம்பரனார் துறைமுகப் பொறுப்புக்கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

மக்கள் தொர்டர்பு அதிகாரி